**கவனிக்க** .– *2015.11.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1943 - 2015 නොවැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2015.11.27

*1943 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 264 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (குடியியல் நியாயாதிக்க) ஒடுக்கப்படுவதற்கான அறிவித்தல்

H.C (குடியியல்) வழக்கு இல. : 46/ 2015/CO

ஸ்டார் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் என்ஜினியர்ஸ் (பிரைவட்) லிமிட்டட். (PV 1726);

மற்றும்

இல. 337/A, முதலாம் மாடி, நாவல வீதி, இராஜகிரியவில் உத்தியோகபூர்வ அலுவல கத்தைக் கொண்ட கம்பனியின் கலைத்தல் தொடர்பான அறிவித்தல்;

வரையறுக்கபட்ட Bitumix(தனியார்) கம்பனி இல. 09, பங்கிரிவத்தை மாவத்தை, நுகேகொடை.

மனுதாரர்

இத்தால் சகலரும் அறியும்படியாக அறிவிப்பது யாதெனில் மேற்குறித்த கம்பனி, மேல்மாகாண மேல் நீதிமன்றத்தினால் (கொழும்பில் அமையப்பெற்றுள்ளது) தன்னுடைய குடியியல் நியாயாதிக்கத்தின்படி 2015. 09.09 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட கலைத்தல் தொடர்பான மனுவின் பிரகாரம் 2016.01.19 அன்று இவ்விடயம் நீதிமன்றத்தில் அழைக்கப்படும். மேலும் குறித்த எந்தவொரு கடன்கொடுனர் அல்லது பங்குவகிப்போர் இவ்விடயத்தை ஆதரிக்கவோ, அல்லது எதிர்வாதம் முன்வைக்கவோ விரும்பின் மேற்குறித்த மனு விசாரிக்கப்படும்போது குறித்த நபரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணியோ நீதிமன்றத்தின் முன் சமுகமளிக்க வேண்டும். குறித்த கட்டணங்களுக்கு அமைவாக குறித்த மனுவின் பிரதியை குறித்த கம்பனியின் கடன்கொடுனருக்கோ அல்லது பங்குதாரருக்கோ வழங்கப்படும்.

கையொப்பம் :

M/ S F.J. and G. De Seram
Attorneys at Law
2016, De Seram Place,
Colombo.

**குறிப்பு**.- மேற்குறித்த மனு தொடர்பில் நீதிமன்றத்தில் சமுகம் தர விரும்பும் எவரும் தம்முடைய சமுகமளித்தல் தொடர்பான அறிவித்தலை எழுத்தில் மேற்குறித்த F.J. and G.De Seram Attorneys at Law விற்கு அறியத்தர வேண்டும். குறித்த அறிவித்தலானது அறிவித்தலை விடுப்பவரின் பெயரையும் முகவரியையும் தெளிவாக உள்ளடக்கியிருக்க வேண்டும். மேலும் குறித்த அறிவித்தல் குறித்த நபரால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணியால் ( நியமிக்கப்பட்டால்) கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த அறிவித்தலானது நேரடியாக அல்லது தபாலில் வழங்கப்பட முடியும். தபாலில் அறிவித்தலை அனுப்பும் போது தபால் வந்து சேருவதற்கான நியாயமான கால இடைவெளியில் தபாலிலிடப்பட வேண்டும். அத்தபால் 2016.01.18 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

11-737